**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம், கொடைக்கானல்**
**எஸ்.டி.சி.எண்.251/2022**
**வழக்கு சாட்சி : PW1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருள்பிரகாஷ் | கணவர் | |
| தகப்பனார் | அய்யனார் | தொழில் | எலெக்ட்ரிகல் |
| கிராமம் | தாண்டிக்குடி | சமயம் | இந்து |
| தாலுக்கா | கொடைக்கானல் | வயது | 43 |
| தேதி | 03.10.2023 | | |

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்படுகிறது.)

**முதல் விசாரணை:**

நான் தாண்டிக்குடியில் குடியிருந்து வருகிறேன். எலெக்ட்ரிகல் வேலை செய்து வருகிறேன். எதிரியைத் தெரியும். 04.03.2018-ம் தேதி சுமார் 08 மணிமுதல் 09 வரை வரையிலான நேரங்களில் நான் கடையில் இருந்தபோது எதிரி சரவணன் கெட்ட வார்த்தையால் மிகவும் தகாத வார்த்தைகளால் திட்டினார். கையில் இருந்த மம்பிட்டி பிடியை எடுத்து எனது தலையிலும் காலிலும் அடித்துவிட்டார். அதில் எனக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த எனது அப்பா, எனது மனைவி ஆகியோர்கள் தடுக்க வந்த போது அவர்களையும் எதிரி அடித்தார். அதில் அப்பாவுக்கு கையில் காயம் ஏற்பட்டது. எனது மனைவிக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது. நான் சுயநினைவு இல்லாமல் கீழே விழுந்துவிட்டேன். எனது கடையை அடித்து நொறுக்கிவிட்டார். பின்னர் என்னை அருகில் உள்ள தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் அங்கு முதல் உதவி சிகிச்சை பெற்று 108 ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எனக்கு தலையில் 27 தையல் போட்டார்கள். அங்கு 10 நாட்கள் சிகிச்சை பெற்றேன். பின்னர் எனது உறவினர் வீட்டில் இருந்து கொண்டு மதுரை கிறிஸ்துவ மிஷன் மருத்துவமனைக்கு வெளிநோயாளியாக 4 மாதம் சிகிச்சை பெற்றேன். இது சம்மந்தமாக எனது அப்பா தாண்டிக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் சுயநினைவுடன் இல்லாமல் இருந்ததால் எனது அப்பா

புகார் கொடுத்தார். அந்த புகாரில் நான் கைரேகை செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கைரேகை என்னுடையது தான். **அந்த கைரேகை அ.சா.ஆ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

இல்லை.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2023.10.03 13:46:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 (FAC)
கொடைக்கானல்

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம், கொடைக்கானல்**
**எஸ்.டி.சி.எண்.251/2022**
**வழக்கு சாட்சி : PW2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அய்யனார் | கணவர் | |
| தகப்பனார் | சின்னக்கண்ணுப்பிள்ளை | தொழில் | கூலி |
| கிராமம் | தாண்டிக்குடி | சமயம் | இந்து |
| தாலுக்கா | கொடைக்கானல் | வயது | 66 |
| தேதி | 03.10.2023 | | |

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்படுகிறது.)

**முதல் விசாரணை:**

நான் தாண்டிக்குடியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன் ஆவார். எதிரியைத் தெரியும். 04.03.2018-ம் தேதி ஞாயிற்று கிழமை பகல் காலை 8.45 மணிக்குள் எனது மகனின் கடைக்கு எதிரி அத்துமீறி நுழைந்து எனது மகனை மம்பிட்டி பிடியால் அடித்துக் கொண்டு இருந்தார்கள். 5 அல்லது 6 நபர்கள் சேர்ந்து அடித்துக் கொண்டு இருந்தார்கள். எனது மகன் இரத்தகாயத்தோடு மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்த எனது மகனை மீண்டும் அடித்தார்கள். நானும் எனது மருமகள் தமிழ்செல்வி ஆகியோர்கள் விலக்க சென்றோம். அவர்கள் எங்கள் இருவரையும் அடித்தார்கள். அருகில் இருந்தவர்கள் எனது மகனை தூக்கிவிட்டு தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு முதல் உதவி சிகிச்சை அளித்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். எனக்கும் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்கள். அங்கு 12 நாட்கள் இருந்தேன். பின்னர் என்னை அனுப்பிவிட்டார்கள். நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது மகனை 26 நாட்கள் மருத்துவமனையில் வைத்திருந்தார்கள். அவருக்கு மம்பிட்டி பிடியால் அடித்ததால் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. இது சம்மந்தமாக தாண்டிக்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகாரில் உள்ள 2-வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை:**

இல்லை.

K KARTHIK
Digitally signed by K KARTHIK
Date: 2023.10.03 13:46:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 (FAC)
கொடைக்கானல்

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம்,**
**கொடைக்கானல்**
**எஸ்.டி.சி.எண்.251/2022**
**வழக்கு சாட்சி : PW3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தமிழ்செல்வி | கணவர் | அருள்பிரகாஷ் |
| தகப்பனார் | --- | தொழில் | இல்லத்தரசி |
| கிராமம் | தாண்டிக்குடி | சமயம் | இந்து |
| தாலுக்கா | கொடைக்கானல் | வயது | 36 |
| தேதி | 03.10.2023 | | |

(எதிரி ஆஜா் இல்லை. கு.வி.மு.ச.317-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்படுகிறது.)

**முதல் விசாரணை:**

நான் தாண்டிக்குடியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவா் ஆவாா். அ.சா.2 எனது மாமனாா் ஆவாா். எதிரியைத் தெரியும். 04.03.2018-ம் தேதி சுமாா் 09.00 மணியளவில் எதிரியின் குடும்பத்தாா்கள் எங்கள் கடைக்கு வந்தாா்கள். வந்து கெட்ட வாா்த்தையால் திட்டினாா்கள். திடீரென்று மம்பிட்டி கைப்பிடியை எடுத்து எனது கணவரின் தலையில் அடித்துவிட்டாா். காலிலும் அடித்துவிட்டாா். நானும் எனது மாமனாரும் தடுக்க வந்தோம். எனது மாமனாரை வலது கையில் அடித்துவிட்டாா். என்னையும் அடித்து கீழே தள்ளிவிட்டாா். எனது கணவருக்கு தலையில் அடித்ததால் இரத்தம் அதிகமாக வந்துகொண்டிருந்தது. பின்னா் அருகில் உள்ளவா்கள் தாண்டிக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாா்கள். அங்கு முதல் உதவி சிகிச்சை செய்துவிட்டு மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாா்கள். எனது கணவருக்கு தலையில் 13 தையல் போட்டாா்கள். அங்கு 10 நாட்கள் எனது கணவா் சிகிச்சையில் இருந்தாா். பின்னா் மதுரையில் உள்ள உறவினா் வீட்டில் 4 மாதம் இருந்து தனியாா் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாா். போலீசாா் என்னை விசாரித்தாா்கள்.

**குறுக்கு விசாரணை:**

இல்லை.

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2023.10.03 13:46:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவா் எண்.1 (FAC)
கொடைக்கானல்